ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1944/29 - 2015 දෙසැම්බර් මස 09 වැනි බදාදා - 2015.12.09
*1944/29 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநர் எம். பீ. ஜயசிங்க ஆகிய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களை செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. குணதாச சமரசிங்க அவர்கள், 2015.12.07 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில் ஊவா மாகாணத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு, நன்னீர் மீன்பிடி தொடர்பான அமைச்சின் செயலாளராக.

2. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜீ. கே. எஸ். எல். ராஜதாச அவர்கள் 2015.12.07 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில் ஊவா மாகாணத்தின் வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கூட்டுறவு தொடர்பான அமைச்சின் செயலாளராக.

3. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. சுமித் சுரவீர அவர்கள் 2015.12.07 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில் ஊவா மாகாணத்தின் விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலாத்துறை, போக்குவரத்து, கலாசாரம், நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் தொடர்பான அமைச்சின் செயலாளராக.

4. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள், 2015.12.07 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில் ஊவா மாகாணத்தின் பிரதி தலைமைச் செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி).

5. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஆர். எம். டி. பீ. ஹாதியல்தெனிய அவர்கள் 2015.12.03 ஆந் திகதி முதல் உடனடியாக செயற்படும் வகையில் ஊவா மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணையகத்தின் செயலாளராக பதிற்கடமையாற்ற.

6. மொணராகலை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளராக சேவையாற்றும் வைத்தியர் திரு. பீ. டி. கே. அதிகாரி அவர்கள், 2015.12.04 ஆந் திகதி முதல் 2015.12.07 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2015.12.04 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, வைத்தியர் திரு. எச். ஜீ. ஜீ. எல். பீ. ஆரியதாச அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக மொணராகலை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு,

எம். பீ. ஜயசிங்க,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2015, திசெம்பர் 07.

12 - 858



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.